**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044369

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் V&AC Year ஆண்டு: 2022 FIR No.: மு.த.அ. எண் 15/2022/AC/CB Date: நாள் 15.10.2022

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 1988, as amended by the prevention OF Corruption (Amendment) Act Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 14.10.2022 Date to நாள் வரை : 14.10.2022
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 1700 hrs Time to நேரம் வரை : 23.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2022 Time நேரம் : 07.45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.10.2022 Time நேரம் : 07.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RTO check post, K.G.Chavadi check post (outgoing) Coimbatore. at about 25 km North west.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Senapathi (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Arumugam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 37 yrs (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspection cell Inspector, (g) Address : முகவரி District Inspection Cell office, Collectorate Campus, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

D. Tmt. M. Eswari, Motor vehicle Inspector (Non Technical) K.G.Chavadi Checkpost (outgoing) RTO check post, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 15/10/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 15/10/2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 15.10.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. Parimaladevi
Rank: நிலை Inspector of Police, No. எண்
V&AC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

**Contents of FIR in Cr.No.15/2022/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.**

இன்று 15.10.2022 ஆம் தேதி சனிக்கிழமை காலை 07.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.A.சேனாபதி, ஆய்வுக்குழு ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2022/AC/CB, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018, Dated: 15.10.2022 ன்படி எதிரி 1) திருமதி.M.ஈஸ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பமல்லாத), போக்குவரத்துத் துறை சோதனை சாவடி, கந்தே கவுண்டன் சாவடி (வெளிச்செல்கை), கோவை என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், திரு.சேனாபதி, ஆய்வுக்குழு ஆய்வாளர்/ முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை-30. ந.க.எண்.669/2022/ஐ1. நாள்.15.10.2022. அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிசெல்கை) - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்மந்தமாக. கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரியும் நான் கோயம்புத்தூர் மாவட்டம் கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடியில் (வெளிச்செல்கை) பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்வதற்காகவும், தற்காலிக உரிமம் வழங்குவதற்காகவும், E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச்சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை)

அலுவலகத்தினை 14.10.2022 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணி அளவில் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.பரிமளாதேவி மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில் நுட்பமல்லாத) திருமதி.M.ஈஸ்வரி என்பவரும், உதவியாளராக திரு.யுவராஜ் என்பவரும், அலுவலக உதவியாளராக திரு.ராஜ்குமார் என்பவரும் 14.10.2022 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் பணியில் இருந்தது தெரியவந்தது. மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனைச்சாவடி கோவை - பாலக்காடு கிழக்கு மேற்காக செல்லும் பிராதான சாலையில் தென்புறத்தில் வடக்கு பார்த்த நுழைவுவாயிலுடன் கூடிய காண்கிரீட் கட்டிடத்தில் அமைந்துள்ளது. மேற்படி சோதனைச்சாவடி அலுவலகத்தின் முன்புறம் இருந்த ஒரு நபர் சோதனை சாவடிக்கு முன்பாக உள்ள நான்குவழி சாலையில் சோதனைசாவடியை கடந்து செல்லும் வாகனங்களை நிறுத்தி அதன் ஓட்டுனர்களை சோதனை சாவடிக்குள் செல்லுமாறு சைகை செய்து கொண்டிருந்தார். அவரிடம் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் என்னையும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் சோதனைக் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கைக்காக வந்துள்ள விபரம் தெரிவித்து அவரைப்பற்றி விசாரிக்க தனது பெயர் R.ராஜ்குமார் என்றும், தான் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் கடந்த 11.10.2021-ம் தேதி முதல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அந்த நபரை அழைத்துக்கொண்டு சோதனைச்சாவடிக்குள் சென்று கொண்டிருந்தபோது சோதனை சாவடியின் நுழைவாயிலுக்கு அருகில் கையில் ஆவணங்களுடன் Counter முன் நின்று கொண்டிருந்த 5 நபர்களிடம் ஆய்வுக்குழு ஆய்வாளர் ஆகிய நான் என்னையும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் சோதனைக் குழுவினரை அறிமுகம் செய்து கொண்டு விசாரித்தபோது அவர்கள் அவரவர் வாகனத்தின் ஆவணங்களை காண்பித்து பணம் கொடுத்து முத்திரை பெறுவதற்காக நின்றிருக்கும் விபரத்தை தெரிவித்தனர். எனவே மேற்படி நபர்களையும் விசாரிப்பதற்காக இந்த போக்குவரத்து துறை சோதனைச் சாவடிக்குள்ளே அழைத்துவந்து அமரவைக்கப்பட்டது. மேற்படி சோதனைச்சாவடி அலுவலகத்தின் முன்புறம் சோதனை சாவடிக்குள் பிரதான ஹாலில் உள்ள E-way bill மற்றும் Trip sheet-களுக்கு சீல் வைக்கும் கவுண்டருக்கு எதிரில் இருந்த இருக்கையின் அருகில் காக்கி சீருடையுடன் ஒருவர் நின்று

கொண்டிருந்தார். அவரிடம் என்னையும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் சோதனைக்குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கை செய்யவந்துள்ள விபரத்தை தெரிவித்தும் எங்களை சுயபரிசோதனை செய்து எங்களிடம் பணம் ஏதும் இல்லை என்பதை உறுதிபடுத்திய பின்னர் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி காக்கி சீருடை அணிந்து நின்று கொண்டிருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.M.ஈஸ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத) என்றும், கடந்த 14.08.2021-ம் தேதி முதல் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் 14.10.2022-ம் தேதி காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை சுழற்சி முறையில் பணியில் தானும் உதவியாளர் திரு.யுவராஜ், திரு.ராஜ்குமார், அலுவலக உதவியாளர் ஆகியோர்களும் பணியில் இருப்பதாக தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.ஈஸ்வரி அவர்களிடம் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேடு பற்றி விசாரிக்க அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் இன்று காலை அவர் ரூ.3,500/- கொண்டு வந்துள்ளதாகவும், உதவியாளர் திரு.M.யுவராஜ், ரூ.2,600/- கொண்டு வந்துள்ளதாகவும், அலுவலக உதவியாளர் திரு.R.ராஜ்குமார் ரூ.810/- கொண்டுவந்துள்ளதாகவும் பதிவு செய்து கையொப்பம் செய்திருந்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.ஈஸ்வரி அவர்களிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது கைபையில் இருந்த ரூ.2,700/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். கையிருப்பு பணப்பதிவேட்டில் ரூ.3,500/- பதிவு செய்திருந்த விபரத்தை விசாரிக்க, அவர் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.3,500/-ம் கொண்டு வந்ததாகவும், அப்போது டிப்பன் மற்றும் இதர செலவிற்காக ரூ.800/-ஐ செலவளித்து விட்டதாகவும், செலவளித்தது போக மீதி பணம் தான் இந்த 2,700 ரூபாய் என்றும் தெரிவித்தார். அந்த பணத்தை அவரிடமே திருப்பிகொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து உதவியாளர் திரு.M.யுவராஜ் அவர்களின் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேட்டில் ரூ.2,600/-பதியபட்டிருந்ததை பற்றி விசாரிக்க அவர் இன்று காலை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்த பணம் என்றும், அதில் ரூ.100/-ஐ செலவு செய்துவிட்டதாகவும், மீதி பணம் ரூ.2,500/- இருப்பதாகவும் தெரிவித்தார். அதனால் அந்தப்பணம் ரூ.2,500/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இங்கு அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.ராஜ்குமார் அவர்களிடம் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேட்டில் ரூ.810/-பதியபட்டிருந்ததை பற்றி விசாரிக்க அவர் இன்று காலை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்து ரூ.810/- இருப்பதாக சொல்லி தெரிவித்தார். அதனால் அந்தப்பணம் ரூ.810/-ஐ அவரிடமே திருப்பி

கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து E-way Bill மற்றும் Trip Sheet-களுக்கு சீல் வைக்கும் கவுண்டருக்கு எதிரில் திருமதி.ஈஸ்வரி அவர்கள் நின்று கொண்டிருந்த இருக்கைக்கு முன் இடதுபுற மர ஷெல்பின் கீழ் பகுதியில் ஒரு அட்டை பெட்டியை பார்த்த போது, அதில் ஐநூறு, நூறு, ஐம்பது, இருபது மற்றும் பத்து ரூபாய் நோட்டுகளாக தனித்தனியான கத்தைகளாக கிளிப் போடப்பட்டு காணப்பட்டது, அதனை எடுத்து எண்ணிபார்க்க ரூ.12,380/- இருந்தது. அதன் விபரம் பின்வருமாறு ரூ.500X17=8,500/-, ரூ.200X1=200/, ரூ.100X22=2,200/-, ரூ.50X19=950/-, ரூ.20X19=380/-, ரூ.10X15=150/- ஆகும். மேலும் அதனை தொடர்ந்து தெற்கு பகுதியில் இருந்த அறையை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.M.ஈஸ்வரி அவர்களிடம் விசாரித்தபோது அந்த அறையானது மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆகிய நாங்கள் அமரக்கூடிய அறையாகும் என்று தெரிவித்தார். அந்த அறையை சோதனை செய்தபோது அந்த அறையில் இருந்த மர மேஜையின் வலது புற டிராயரை சோதனை செய்து பார்த்த போது, அதில் இரண்டாயிரம், ஐநூறு, இருநூறு மற்றும் நூறு, ரூபாய் நோட்டுகளாக ரூ.11,000/-ம் மற்றும் ரூ.10,000/-ஆக தனித்தனியாக இரண்டு கத்தைகளாக காணப்பட்டது, அதனை எடுத்து எண்ணிபார்க்க மொத்தம் ரூ.21,000/- இருந்தது. அதன் விபரம் வருமாறு ரூ.2000X1=2,000/-, ரூ.500X21=10,500/-, ரூ.200X35=7,000/-, ரூ.100X15=1,500/- ஆகும். மேற்படி மொத்த பணத்தை பற்றி திருமதி.ஈஸ்வரி அவர்களிடம் கேட்க அவர் மேற்படி தொகையானது தமிழ்நாட்டின் எல்லையை கடந்து செல்லும் அனைத்து வாகனங்களும் தமிழக எல்லையை கடந்து சென்றதற்கு ஆதாரமாக வைக்கப்படும் முத்திரைக்காக அதன் ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் ரூ.50/- முதல் ரூ.500/- வரை வாங்குவது வழக்கம் என்றும், அந்த வகையில் இன்று காலை 8.00 மணிக்கு தான் அலுவலுக்கு ஆஜரானது முதல் சோதனைக்குழுவினர் வரும் வரை பெறப்பட்ட மாமூல் பணம் தான் இத்தொகை என்றும் தெரிவித்தார். மேலும் அவ்வாறு பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில் தனக்கு 50%-ம், உதவியாளர் திரு.யுவராஜ் 25%-ம், அலுவலக உதவியாளர் திரு.ராஜ்குமாருக்கு 25%-ம் என்று பிரித்துகொள்வோம் என்று தெரிவித்தார். மேற்படி மாமூல் பணம் என்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. M.ஈஸ்வரி அவர்கள் தெரிவித்த ரூ.33,380/- ஆனது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இச்சோதனைச் சாவடியில் வசூலிக்கப்பட்ட வேறு தொகை பற்றி விசாரிக்க உதவியாளர் திரு.யுவராஜ் சோதனைச் சாவடியை கடந்து செல்லும் வாகனங்களுக்கு தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி போடுவதற்காக வரும் நபர்களிடமிருந்து பணம் வசூல் செய்து இரசீது போட்டு கொடுப்பது தனது வேலை எனவும் அது சம்மந்தமான விபரங்கள் பிரதானஹாலின் மேற்கு புறம் இருந்த கணினி அறையிலிருக்கும் கணினியிலும்,

இவ்வலுவலக பதிவேடுகளிலும் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவித்து மேற்படி அறைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்த டேபிள் டிராயரை திறந்து பார்த்தபோது ரூபாய் நோட்டுகள் இருந்தன. அதை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.18,500/- இருந்தது. அந்த தொகையை பற்றி யுவராஜ் அவர்களை கேட்டபோது இன்று 14.10.2022-ம் தேதி காலை 08.00 மணி முதல் சோதனைக்குழுவினர் வந்தடைந்தது வரை தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி மற்றும் அபராதமாக வசூலிக்கப்பட்ட மொத்த அரசு கட்டணம் என்று தெரிவித்தார். மேற்படி தொகை குறித்து இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த வாகன தணிக்கை பதிவேடு, தினசரி கணக்கு பதிவேடு மற்றும் கணினி பதிவுகளை ஒப்பிட்டு சரிபார்த்த போது மேற்படி வசூல் செய்யப்பட்ட தொகையானது சரியாக இருந்ததால் அத்தொகையான ரூ.18,500/-ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் இரவு 08.00 மணிக்கு மேற்படி அலுவலர்கள் சுழற்சி பணி முடித்து ஒப்படைக்கும்போது கையிருப்பு தொகையினை (1) 14.10.2022-ம் தேதியிட்ட தினசரி கணக்கு பதிவேட்டின் வ.எண்.448ல் குறிப்பிட்டிருந்த ரூ.22,100/-ஐ சரிபார்த்த பக்கத்தின் நகல், (2) Government of Tamilnadu, Transport Department, Vehicle Check Report Sl.no.B-061196 and B-061197 ஆகியவற்றின் நகல் (3) KG Chavadi (Outgoing) Account Statement for YUVARAJ for the date 14-10-2022 (Generated on 14-10-2022 20:04:48) என்ற கணினி Print Out ஆகியவை திருமதி.ஆ.ஈஸ்வரி அவர்களிடம் சான்றொப்பமிடப்பட்டு பெறப்பட்டது. மேலும் இச்சோதனைச் சாவடியின் 4) வருகைப்பதிவேடு 2022 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் அக்டோபர் மாதத்தின் வருகை குறிப்பு பதிவு நகல் மற்றும் 5) நாள் 14.10.2022 ஆம் தேதிக்கான பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேடு பக்கம் 164-ன் நகல் ஆகியவற்றில் திருமதி.ஆ.ஈஸ்வரி அவர்களால் சான்றொப்பமிடப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி.M.ஈஸ்வரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. மேலும் இந்த திடீர் தணிக்கையின் போது ஆகமொத்தம் பணம் ரூ.33,380/- கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனை சாவடியில் விசாரணைக்காக அமரவைக்கப்பட்டிருந்த நபர்களான 1).திரு.R.மனோகரன், 2).திரு.P.துரைசாமி, 3).திரு.M.முருகேசன், 4).திரு.A.லட்சுமணன் மற்றும் 5).திரு.P.ராஜா ஆகியோர்களை என்னால் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அவர்கள் வசம் வைத்திருந்த அவரவர் வாகனத்திற்குரிய ஆவணங்களின் நகல்கள் மட்டும் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனைச்சாவடி அலுவலர்களிடம் முத்திரை பெறுவதற்கு வைத்திருந்த பணத்தை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையானது இன்று

14.10.2022-ம் தேதி 17.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டு ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.33,380/- மற்றும் இதர ஆவணங்கள் இத்துடன் இணைத்துள்ளேன். இப்புகார் குறித்து உரிய புலன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 15/10/2022 ஆய்வுக்குழு ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை. இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு 2) கைப்பற்றப்பட்ட பணம் 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Madam, Received the complaint along with Proceedings, cash Rs.33,380/-, Documents, Statements on 15.10.2022 at 07.45 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.15/ 2022/AC/CB, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 15.10.2022 at 08.15 hrs against Tmt.M.Eswari, Motor Vehicle Inspector (Non Technical), R.T.O. Check Post, Kande Gounden Chavadi (Out Going), Coimbatore. Sdxxxxx 15/10/2022 (P.Parimaladevi), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. மேற்படி பதிவு செய்யப்பட்ட அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு, அத்துடன் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் புகார் மனுவுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

15/10/2022

(P.பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.